

திருச்சியில் மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறனின் 21 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தில்லைநகரில் உள்ள தி.மு.க. மாவட்ட அலுவலகத்தில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே. என்.நேரு தலைமையில் தி.மு.க.வினர் முரசொலி மாறனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி,மாநகர செயலாளரும், மேயருமான அன்பழகன், அவைத் தலைவர்கள் பேரூர் தர்மலிங்கம் மாவட்டத் துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ் கருணாநிதி, டோல்கேட் சுப்பிரமணி, தொ.மு.ச. மாநில செயலாளர் குணசேகர் கோட்டத் தலைவர் துர்கா தேவி, கண்ணன் மோகன்தாஸ் ராம்குமார், ராமலிங்கம் கிராப்பட்டி செல்வம், பீ.ஆர்.பாலசுப்பிரமணியன் கலைச்செல்வி, சிங்காரம் உள்ளிட்ட பகுதி செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய செயலாளர்கள் முரசொலி மாறனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிந்து மரியாதை செலுத்தினர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்,

# முரசொலிமாறன் 21ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மலர் தூவி மரியாதை!

திருவண்ணாமலை, நவ.24-

திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 21ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப் பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், முர சொலிமாறன் திருவுருவப் படத்திற்கு மலர்த்தூவி மரி யாதை செலுத்தினார்.

23.11.2024 சனிக்கிழமை காலை திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில், மறைந்த முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திராவிட இயக்க தத்துவ பேராசானு மான முரசொலிமாறன் அவர்களின் 21ஆம் ஆண்டு நினைவு நாள் அனுசரிக்கப் பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் அலங் கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலிமாறன் அவர்க ளின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர்த் தூவி மரியாதை செலுத்தி னார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச் சாண்டி, கழக மருத்துவ ரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திரு வண்ணாமலை தொகுதிப் பொறுப்பாளர் டாக்டர் இரா.மாசிலாமணி, சட்ட மன்ற உறுப்பினர்கள் மு. பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் உட்பட பலர் மலர்த் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் கோ.கண் ணன், மாவட்ட பொருளா ளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலா ளர்கள் பிரியாவிஜயரங்கன், விஜியலட்சுமிரமேஷ், நகர செயலாளர் ப.கார்த்திவேல் மாறன், மாநில தொ.மு.ச. துணைத் தலைவர் க.சௌந் தரராசன், மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன்,

மாவட்ட அமைப்பாளர் கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, சு.விஜி(எ)விஜய ராஜ், கு.கணேஷ், பாலமுர ளிகிருஷ்ணா, ஏ.டபள்யு. சர்தார்காசிம்,

ஒன்றிய செயலாளர் பெ. கோவிந்தன், பொதுக்குழு உறுப்பினர் நா.பழனி, நகர நிர்வாகிகள் வட்டி அரு ணாச்சலம், ந.சீனுவாசன், இல.குணசேகரன், ஹக்கிம் சேட் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் பா.ஷெரீப், டி.எம்.கலையர சன், டாஸ்மாக் தொ.மு.ச., இரா.ஆறுமுகம், இல.மின் னல்பாபு, ஏ.எம்.பாஷா, சௌகத்பாஷா, இரா.ராஜ சேகர், லக்கி.அரவிந்த், ஆர்.வெங்கடேஷ், மண்டி பா.ஏழுமலை, நகரமன்ற உறுப்பினர் அ.கோவிந்தன், இரா.பூவராகவன், பா.சற்கு ணப் பாண்டியன், பு.நவீன் குமார், போக்குவரத்து தொ.மு.ச., வி.மகாவிஷ்ணு, ஜி.இராயர், க.சுரேஷ் குமார், செயற்குழு உறுப்பி னர் ரகுபதி, உட்பட ஏராளமானோர் உடன் இருந்தனர்.




திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், மறைந்த ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலிமாறன் அவர்களின் 21ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப்படத்திற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்பி., டாக்டர் இரா.மாசிலாமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் மற்றும் கோ.கண்ணன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், ப.கார்த்திவேல்மாறன், க.சௌந்தரராசன், மேயர் நிர்மலாவேல்மாறன், நா.பழனி, காலேஜ் ரவி, வட்டி அருணாசலம் உட்பட பலர் உள்ளனர்.

### சென்னையில் வசிக்கும் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில்

# இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் திட்டம்! விண்ணப்பிக்கும் காலம் நீட்டிப்பு!

சென்னை, நவ.24-

பெண்களின் பாதுகாப் பில் தமிழ்நாடு சிறந்து விளங்குகின்றது. அதனை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், ஒரு புதிய முன்னெடுப்பாக 'இளஞ்சிவப்பு ஆட்டோக் களை' தமிழ்நாடு அரசு அறி முகப்படுத்தி உள்ளது. பெண்கள் மற்றும் குழந்தை கள் பாதுகாப்பாக பய ணிக்க ஏதுவாக சென்னை மாநகரில் பெண் ஓட்டுநர் கள் மூலம் 250 ஆட்டோக் கள் இயக்கப்பட உள்ளன.

தமிழ் நாடு அரசு, பெண் கள் நலன், பாதுகாப்பு மற் றும் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தி வருகின்றது. அவற்றோடு, பெண்களின் நலனை உறுதி செய்யும் விதமாக விடியல் பயணத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, தோழி விடுதிகள், கைம் பெண்கள் மற்றும் ஆதர வற்ற பெண்களுக்கான ஓய் வூதியத்தை உயர்த்தி வழங்கியது, புதுமைப்பெண் திட்டம் போன்ற பல்வேறு புதிய மகளிர் நலத் திட்டங் களை செயல்படுத்தி, பெண் களின் வாழ்வாதாரம் மற் றும் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்துள்ளது.

பெண்கள் சுய தொழி லில் சிறந்து விளங்க ஊக் கப்படுத்தவும், ஓட்டுநர் உரி மம் பெற்ற பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வும் இத்திட்டம் வழிவகை செய்யும்.

அவசர காலங்களில் புகார் பெறப்பட்டவுடன், காவல் துறையின் மூலம் விரைவான நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்யும் நோக்கத்தோடு ஒவ்வொரு இளஞ்சிவப்பு ஆட்டோவி லும், பெண்களின் பாது காப்பிற்காக காவல்துறை உதவி எண்களுடன் இணைக்கப்பட்ட GPS பொருத்தப்பட்டிருக்கும்.

இது தொடர்பாக, சென்னை மாநகரில் 250 இளஞ்சிவப்பு ஆட்டோக் கள் இயக்க சென்னையில் உள்ள தகுதியான பெண் ஓட்டுநர்கள், இத்திட்டத் தின் கீழ் பயனடைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பத்தை சென்னை மாவட்ட சமூக நல அலுவலர்கள் (வடக்கு மற்றும் தெற்கு), 8ஆவது தளம், சிங்கார வேலர் மாளிகை, சென்னை 600001 என்ற முகவரிக்கு 23.11.2024 தேதிக்குள் அனுப்ப வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டு பத்திரி கைச் செய்தி TNDIPR எண்.1747 வாயிலாக 22.10.2024 அன்று வெளியி டப்பட்டது.

தற்போது, இத்திட்டத் தின் கீழ் பயன்பெற விண் ணப்பிக்கும் கால அளவு 10.12.2024 வரையில் நீட் டிப்பு செய்யப்படுகிறது.

மேலும், இத்திட்டத்தில் தகுதி பெற 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண் டும் என நிர்ணயம் செய்யப் பட்டு இருந்தது. தற்போது, அந்த தகுதி நீக்கப்பட்டு, கீழ்க்கண்ட தேவையான தகுதிகள் மட்டும் நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

i. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

ii. கைம்பெண்கள் மற் றும் ஆதரவற்ற பெண்க ளுக்கு முன்னுரிமை அளிக் கப்படும்.

iii. 25 வயது முதல் 45 வயதிற்குள் இருக்க வேண் டும்.

iv. ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

v. சென்னையில் குடியி ருக்க வேண்டும்.

இதற்கென, சென்னை யில் உள்ள 250 பெண்க ளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் தமிழ் நாடு அரசு CNG/Hybrid ஆட்டோ வாங்க மானியமாக வழங் கும். ஆட்டோ வாங்க தேவைப்படும் மீதி பணத் திற்காக வங்கிகளுடன் இணைக்கப்படும்.

எனவே, சென்னையில் உள்ள தகுதியான பெண் ஓட்டுநர்கள், இத்திட்டத் தின் கீழ் பயனடைய பூர்த் திசெய்யப்பட்ட விண்ணப் பத்தை சென்னை - 600 001. சிங்காரவேலர் மாளிகை, 8ஆவது தளத்தில் செயல்ப டும் சென்னை மாவட்ட சமூக நல அலுவலர் (வடக்கு) அல்லது சென்னை மாவட்ட சமூக நல அலுவ லர் (தெற்கு) என்ற முகவரி யிட்டு 10.12.2024 தேதிக் குள் அனுப்ப வேண்டும்.

இவ்வாறு சமூக நல ஆணையர் அறிவித்துள் ளார்.

